දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. ....................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. ....................................

දිනය / திகதி / Date: 2007.11. 29

சுற்றுநிருப இல : 2007/25

சகல மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
பிரிவேனா தலைவர்களுக்கும்,
அரசாங்க பாடசாலைகளின் அதிபர்களுக்கும்
அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை அதிபர்களுக்கும்

## மாணவர்களுக்கு அடையாள இலக்கம் வழங்குதல்

வருடாந்தம் அரசாங்கப் பாடசாலைகளில் புதிதாக 327000 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதற்கு மேலதிகமாக 3,800,000 இற்கும் அதிகமான மாணவர்கள் பாடசாலை முறைமையில் கல்வி கற்கின்றனர். இம்மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்குரியதான சகல விதமான அறிக்கைகளையும் தொடர்ச்சியாகப் பேண வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. தற்போதைய நிலைமைக்கேற்ப மாணவன்/மாணவியை ஒரு பாடசாலையிலிருந்து வேறொரு பாடசாலைக்குச் சேர்க்கும்போது இவ்வறிக்கையைத் தொடர்ச்சியாகப் பேணும் முறை வீழ்ச்சியடைந்துள்ளதாக தென்பட்டுள்ளது. இந்நிலைமை காரணமாக அநேகமான மாணவர்கள் கஷ்டத்திற்குள்ளாகின்றனர். எதிர்காலத்தில் கல்வித் துறையில் தகவல் தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளமையினால் இவ்வாறான அடையாள இலக்கங்களின் தேவை மேலும் அதிகரித்துள்ளது.

2. எனவே மேற்கூறப்பட்ட சிரமங்களைக் குறைக்கும் நோக்கில் மாணவர்கள் சம்பந்தமாகப் பேணப்பட்டு வரும் அறிக்கையைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்காக மாணவர் அடையாள இலக்கத்தை வழங்குவதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

3. **மாணவர் அடையாள இலக்கத்தை வழங்குதலும் அதன் உள்ளடக்கமும்.**

இவ்விலக்கம் பாடசாலை புள்ளிவிபர இலக்கத்தையும் மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் இலக்கத்தையும் இணைப்பதன் மூலம் தயாரிக்கப்படும்.

| |
|---|
| உ-ம் : பாடசாலை புள்ளிவிபர இல. 2175 ஆக இருக்கும்போது பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் ஒருவரின் சேர்விலக்கம் 6700 ஆக இருப்பின் அவருக்குரிய மாணவர் அடையாள இல 2175/6700 ஆகும். பாடசாலையின் புள்ளிவிபர இலக்கத்தை முதலில் எழுதி மாணவரை அனுமதிக்கும் இலக்கத்தை இரண்டாவதாக எழுதுவது கட்டாயமானதாகும். |

EMISNP

4. 2008ம் ஆண்டு ஜனவரி மாதம் பாடசாலைத் தவணை ஆரம்பிக்கும் தினத்தில் பாடசாலையிலுள்ள தரம் 2 மற்றும் அதனைவிட உயர்தரங்களின் மாணவர்களுக்காகவும் 2008ஆம் ஆண்டில் புதிதாக தரம் 1 இற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களுக்காகவும் மாணவர் அடையாள இலக்கங்களைத் தயாரிப்பதற்காக அவர்கள் கற்கும் பாடசாலையின் பாடசாலைப் புள்ளிவிபர இலக்கத்தையும் அவர்களுக்கு அப்பாடசாலையிலிருந்து வழங்கப்பட்ட சேர்விலக்கத்தையும் பயன்படுத்த வேண்டும்.

யாரேனும் ஒரு மாணவர் 2007ம் ஆண்டின் ஏதாவதொரு ஒரு தினத்தில் பாடசாலை விடுகைப் பத்திரத்தைப் பெற்று 2008 ஆம் ஆண்டில் புதிய பாடசாலைக்குச் சேரும்போது, அம்மாணவருக்கு அவர் 2008 ஆம் ஆண்டில் சேர்க்கப்படும் பாடசாலைக்கு அமைவாக புதிய அடையாள இலக்கத்தை வழங்க வேண்டும்.

முறைசாராக் கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் அல்லது வெளிநாட்டிலிருந்து வருகை தந்து அரச பாடசாலையொன்றில் ஏதாவதொரு தரத்திற்கு 2008 ஆம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவருக்காக 2008 ஆம் ஆண்டில் அவர் சேர்த்துக்கொள்ளப்பட்ட பாடசாலைக்கு அமைவாக புதிய அடையாள இலக்கத்தை வழங்கவேண்டும்.

பிரிவேனா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைக்காக பாடசாலை புள்ளிவிபர இலக்கத்தை வழங்கிட இதன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். பிரிவேனாத் தலைவர்களும் மற்றும் தனியார் பாடசாலை அதிபர்களும் தமது பாடசாலைக்கான அடையாள இலக்கத்தை கல்வி அமைச்சின் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

5. 2009 ஆம் ஆண்டிலிருந்தும் அதற்குப் பின்னரும் பாடசாலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களுக்காக அடையாள இலக்கத்தை தயாரித்துக்கொள்வதற்கு அவர்கள் முதலாம் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளும் பாடசாலையில் பாடசாலை புள்ளிவிபர இலக்கத்தையும் அப்பாடசாலையிலிருந்து வழங்கப்படுகிற சேர்வு இலக்கத்தையும் பயன்படுத்த வேண்டும்.

6. மேற்கூறப்பட்ட 4 ஆம் அல்லது 5 ஆம் பந்திகளுக்கமைய அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்கள் அதற்குப்பிறகு வேறு பாடசாலைகளுக்கு சேர்க்கப்படும்போது அவர்கள் முதற்தடவையில் பெற்றுக்கொண்ட அடையாள இலக்கம் மாற்றமடையாது. புதிய பாடசாலையின் உரிய ஆவணத்தில் அவர்கள் முதற்தடவையாக பெற்றுக்கொண்ட அடையாள இலக்கத்தைக் குறிப்பிட வேண்டும். (அவ்வாறாயின் ஏதாவதொரு பாடசாலைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டபோது ஒரு அடையாள இலக்கத்தைப் பெற்ற மாணவர் ஒருவர், வேறொரு பாடசாலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட போதிலும் அவரின் அடையாள இலக்கமானது முதலில் இருந்த பாடசாலையில் வழங்கப்பட்ட அடையாள இலக்கமாகும்.)

7. மாணவரொருவரை பாடசாலைக்குச் சேர்த்துக்கொள்ளும்போது தற்பொழுது வழங்கும் சேர்விலக்க முறை மாற்றமின்றிப் பேணப்படும்.

8. ஏதாவதொரு பாடசாலையின் பாடசாலைப் புள்ளிவிபர இலக்கம் தொடர்பாக பிரச்சினைகள் இருப்பின் அதுதொடர்பான தகவல்களை அப்பாடசாலைக்குரிய வலயத்தின் திட்டமிடல் விடயத்திற்குப் பொறுப்பான பி.க.ப / உ.க.ப இடம் அல்லது கல்வி அமைச்சின் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர் (தொலைபேசி இல 011- 2785566) இடமிருந்து பெறமுடியும்.

9. இம்மாணவர் அடையாள இலக்கம் பயன்படுத்தக் கூடியவகையில் மறுசீரமைத்து கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை பாடசாலைகளுக்கு வழங்க கல்வி அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

9.1 நாளாந்த வரவுப் படிவம் - Education C31

9.2 மாணவர்களை சேர்த்துக்கொள்ளல் மற்றும் வகுப்பேற்றம் உட்பட பாடசாலை விலகல் தொடர்பான ஆவணம் - Education C 32

9.3. மாணவரின் அடைவு மட்டம் - Education B 59

10. பாடசாலைகளுக்கு கிடைக்கும் புதிய சேர்வு ஆவணம் 2008 ஆம் ஆண்டிலிருந்து புதிதாகச் சேர்த்துக்கொள்ளும் மாணவர்களின் தகவல்களை உள்ளடக்குவதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

11. சுற்றுநிருபம் தொடர்பான மேலதிக தகவல்களுக்காக கல்வி அமைச்சின் பாடசாலை செயற்பாட்டுப் பிரிவின் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

ஆரியரத்ன ஹேவகே
செயலாளர்,
கல்வி அமைச்சு.

EMIS